15
03/07

# රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
# பதிவாளர் நாயகம் திணைக்களம்
# REGISTRAR GENERAL'S DEPARTMENT

தமிழ் மொழிப்பெயர்ப்பு


මගේ අංකය
எனது இல.
My No.
RG/MBD/11/பொது மக்கள் சிக்கல்கள்

ප්‍රධාන කාර්යාලය
தலைமை அலுவலகம்
HEAD OFFICE

තැ. පෙ. අංකය
த. பெ. இல.
P. O. Box No.
565

2022.01.07

234/A3, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.
234/A3, Denzil Kobbakaduwa Mawatha, Battaramulla.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date


சுற்றுநிருபம் இலக்கம் :- 02/2022

திணைக்களத்தின் அனைத்து நிறைவேற்று/ பதவிநிலை அலுவலர்களுக்கு,

**<u>பொதுமக்கள் மனக்குறைகளினை தீர்க்கும் குழுவினை அமைத்தல்</u>**

பொது மக்களின் வாழ்க்கையில் முக்கியமான நிகழ்வுகளான பிறப்பு, விவாகம் மற்றும் இறப்புக்களினை பதிவு செய்தல், அந்த ஆவணங்களினை பாதுகாத்தல் மற்றும் கோரிக்கையின் பேரில் அவற்றிலிருந்து உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்கல் மற்றும் அதன் மூலம் பொதுமக்களின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் இந்த திணைக்களத்தின் பிரதான கடமைகளாகும். அவ்வாறே ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் பிரதிக்கினைப்படுத்தப்பட்ட நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்கின் கீழ் 2030 ஆம் ஆண்டளவில் அனைத்து நபர்களுக்கும் சட்டரீதியான அடையாளத்தினை (Legal Identity) பெற்றுக் கொடுத்தல் இந்த திணைக்களத்திற்கு எதிர்காலத்தில் உள்ள விசேடமான சவாலாகும்.

02. மேற்படி திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்களினை நிறைவேற்றும் பொழுது மற்றும் திணைக்களத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அரசாங்க மற்றும் சர்வதேச பொறுப்புக்களினை நிறைவேற்றும் பொழுது பொதுமக்களிடம் மிகவும் அண்மித்து அவர்களிடமிருந்து எழும் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்கல் வேண்டும்.

03. பொது மக்கள் பதிவு செய்தல் சட்டம் பற்றிய உரிய அறிவின்மை, தவறான ஆலோசனைகள் கிடைக்கப்பெறல் காரணமாக உரியவாறான பதிவு செய்தல் கடைப்பிடிக்கப்படாமை, பல்வேறு காரணங்களினால் போலியான ஆவணங்கள் மக்களின் கையில் கிடைக்கப் பெறல் போன்ற காரணங்களின் பேரில் சிலர் மிகவும் உதவியற்ற தன்மைக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் அநேகமானவை தலைமை அலுவலகத்திற்கு அறிக்கையிடப்படுகின்றன. திணைக்களம் அது பற்றி விசேடமாக கருத்திற் கொண்டு தமக்கு இறுதியான சரியான தீர்வினை பெற்றுத் தரும் என்பது பொது மக்களின் எதிர்ப்பார்ப்பாகும்.

04. ஆகையினால் பொது மக்களின் மனக்குறைகள் சம்பந்தமாக மிகவும் உணர்வு பூர்வமாக வினைத்திறனான பொது மக்கள் சேவையினை பெற்றுக் கொடுத்தலுக்காக மாவட்ட மட்டத்தில் மற்றும் தேசிய மட்டத்தில் பொது மக்கள் மனக்குறைகளினை தீர்க்கும் குழுக்களினை உருவாக்குதல் காலத்திற்கு ஏற்றது என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

05. அதற்கிணங்க திணைக்களம் செயற்பணியில் வரும் ஏதாவது ஒரு அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும், நேரடியாக தீர்வினை வழங்குவதற்கு இயலாத விதமான சிக்கல்களுக்காக மாவட்ட ரீதியில் உருவாக்கப்படும் "பொது மக்கள் மனக்குறைகளினை தீர்க்கும் குழு" இற்கு சமர்ப்பிக்கும் இயலுமை உள்ளது. அதற்கிணங்க சிக்கல்களுக்கு உரிய ஆவணம் பதிவு செய்யப்பட்டிருக்குமாயின் அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ள மாவட்டத்தில் அல்லது ஆவணம் பதிவு செய்யப்படாதிருப்பின் நிகழ்வு இடம்பெற்றுள்ள மாவட்டத்தின் மாவட்ட உதவி பதிவாளர் நாயகத்திற்கு உரிய கோவையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

மாவட்ட குழுவின் அமைப்பானது கீழ் வருமாறாகும்.

- வலய பொறுப்பு பிரதி/ உதவி பதிவாளர் நாயகம் - தலைவர்
- சிக்கலுக்கு உரிய மாவட்டத்தின் உதவி பதிவாளர் நாயகம் - அங்கத்தவர்
- சிக்கலுக்கு உரிய ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது நிகழ்வு நிகழ்ந்துள்ள இடத்திற்கு உரிய பிரதேச செயலகத்தின் மேலதிக மாவட்டப் பதிவாளர் - அங்கத்தவர்

06. விசேட அறிவு உள்ள மேற்படி குழுவிற்கு தமக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள சிக்கல்களுக்கு நேரடி தீர்வினை வழங்குவதற்காக இத்தால் அதிகாரம் அளிக்கின்றேன். அவ்வாறு தீர்க்க இயலாத சிக்கல்கள் இருக்குமாயின் அதன் சிக்கல்களினை குழுவின் சிபாரிசுடன் தேசிய ரீதியாக தலைமை அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள "பொது மக்கள் மனக்குறைகளினை தீர்க்கும் தேசிய குழு" இற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

தேசிய குழுவின் அமைப்பானது கீழ் வருமாறாகும்.

I. சிரேஷ்ட பிரதி பதிவாளர் நாயகம் (சிவில்) - தலைவர்
II. சட்டப் பிரிவின் தலைவர் - அங்கத்தவர்
III. உதவிப் பதிவாளர் நாயகம் (சிவில்) - அங்கத்தவர்
IV. உதவிப் பதிவாளர் நாயகம் (கொழும்பு மாவட்டம்) - அங்கத்தவர்
V. மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு.ஜி.பி.என். த சொய்சா - அங்கத்தவர்

07. தேசிய குழுவிற்கு மாவட்ட குழுவின் சிபாரிசின் பேரில் உரிய சிக்கல்களுக்கு நேரடியாக தீர்வினை வழங்கும் அதிகாரம் உரித்தாவதுடன் இறுதியான பொருத்தமான சிபாரிசு பதிவாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

08. இந்த சுற்றுநிருபம் 2022.02.01 ந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

09. தயவு செய்து இந்த சுற்றுநிருபம் கிடைக்கப்பெற்றமை பற்றி எனக்கு அறிவிக்கவும்.

ஒப்பம்/ டப்ளியூ.எம்.எம்.பி.வீரசேகர
பதிவாளர் நாயகம்

பிரதிகள்:-

1. செயலாளர், ஜனாதிபதி அலுவலகம் - தகவலுக்காக
2. செயலாளர், பிரதமர் அலுவலகம் - தகவலுக்காக
3. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு - தகவலுக்காக
4. செயலாளர், தேசிய பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு - தகவலுக்காக
5. அனைத்து மாவட்ட செயலாளர்கள்/ மேலதிக பதிவாளர் நாயகங்கள் - தகவலுக்காக